# தினசரி வழிபாட்டு முறை



# 10. ஸ்ரீ சத்குரு பள்ளியெழுச்சி

காலத்தை வென்றொளி சேர் மேனி கொண்டான்
கவின் முறுவல் மறையாத வதனம் கொண்டான்
ஞாலத்தில் குழந்தைக்கும் குழந்தையாகி
ஞானமுடையோர்க்கு அறிவின் மன்னராகி
சீலத்தில் பெரியோரெல்லாம் வணங்கி யேத்த
திருவடியால் சிரம் அணிந்த செம்மல் ஆகி
கோலத்தில் துறவரசாய் நின்றான் எங்கள்
குருஞானானந்தன் எனும் தேசிகேசன். 1

அஞ்சு பொறியடக்கி மனம் அடக்கி மோன
ஆலயத்தில் நிராசையெனும் தூபம் காட்டி
விஞ்சு முப சாந்தமெனும் விளக்கேற்றி
விருமான ஆனந்தம் நிவேதனம் செய்து
துஞ்சிவரும் அடியார்க்கு உறுதிகாட்டும்
உயர்பூசை செங்கின்றார் கோவலூரில்
கிஞ்சுகம் சேர் தபோவனத்தில் வாழும் மூர்த்தி
கிளர்ஞானானந்தனெனும் ஆசான் அம்மா! அம்மா! 2